முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1676

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.05.2024,** புதன்கிழமை

1. கருணையே வடிவான அரங்கனே
   கலியுகத்தைக் காக்க வந்த தேசிகனே
   ஆறுமுகன் என் அவதாரனே
   அப்பனே அரங்கனே உந்தனுக்கு
2. உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   உரைத்திடுவேன் ஞான அறிவுரை ஆசி
   (குரோதி வருடம் சித்திரை மாதம் 18 ம் நாள், 01.05.2024, புதன்கிழமை)
   காப்பாக உன்னுள் யானிருந்து
   காலியுகத்தில் ஆற்றல்தனை உந்தனில்
3. உந்தனுக்கு சூட்சும சக்தியாக
   உயர் ஞானம் ஆற்றலும் தந்துவர
   வருகவே அரங்கன் சொல் செயல் அத்தனையும்
   ஆறுமுகன் என் செயலாகும்
4. வரமாக அரங்கன் தரும் தீட்சையெல்லாம்
   வடிவேலன் யான் தரும் தீட்சையாகும்
   அறமோடு கூடிய வாழ்க்கையாக
   அகிலத்தார் அரங்கனைத் தேடி வந்து
5. வந்துமே ஞான தீட்சை அடைந்து
   தடையற ஞானம் பயில
   தவதர்ம சக்தி பெருகுவதோடு
   தானவர்கள் ஞானவான்களாக உலகில் சிறந்து
6. சிறந்துமே அரங்கன் வழிகாட்டலில்
   சிறப்பான ஞான யுகமாற்றத்தை
   அருந்தவசி அரங்கன் அவதார நோக்கமாக
   அகிலத்தார் அற்புதத்தை படைக்க நேரும்

7. நேர்மை கொண்டு அரங்கன் தர்மவழி
நிலவுலகில் மக்கள் தொடர்ந்தால் போதும்
வறுமை விலகும் உலகமெங்கும் அரங்கன் அவதாரம்
வளமாக வல்லமையாக ஆக்கி இனிதே

8. இனிதே உலகமாற்றம் புரியும்
எங்கும் அரங்கன் தர்மம்
தழைத்து இணையில்லாத ஞான ஆட்சியும்
தர்மவான் ஆட்சியும் உருவாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–